[1973 பிப்ரவரி 28

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதுபற்றிய விவரம் இல்லை. 4 : 1 என்ற விகிதத்தில் கால்சியம் க்ளோரைடு, சோடியம் க்ளோரைடு சேர்ந்த கலவையை எலக்ட்ரிக் ஆர்க் கொண்டு 3,000 டிகரி சென்டிகிரேட் உஷ்ணத்தில் ஆவியாக்கி மேகத்தை தூண்டும் செய்முறை பயன்படுத்தப்பட்டது. பணம் வீணாயிற்றே தவிர பயன் இல்லை.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, செயற்கை மழையைப் பற்றிப் பேசினார்கள். "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்று சொல்வார்கள். "தெய்வந்தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட கற்புக்கரசிகளைக் கூப்பிட்டு மழை பெய்விக்க இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அந்த குறளுக்கே அர்த்தம் வேறு என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் உணரு வார்கள். பெய்யெனப்பெய்யும் மழை என்றால், பெய்ய வேண்டிய காலத்தில் பெய்கின்ற மழையைச் சொல்வார்களே தவிர, பெண்க ளெல்லாம் பெய் என்றால் பெய்வது மழை அல்ல.

படிப்புதவித் தொகை குறித்த அறிவிப்புகள்.

*189 வினா. திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆண்டுதோறும் அரசாங்க கெஜட்டில் பிற்பட்ட வகுப் பினர் நலத்துறைத் தலைவரோ அல்லது அரிசன நலத்துறைத் தலைவரோ உதவிப்பணம் கொடுப்பது சம்பந்தமான அறிக்கை வெளியிடுகிறார்களா?

(இ) 1971-72, 1972-73 ஆண்டுகளில் பின்தங்கிய, அரிசன மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை வழங்குவது குறித்து வெளியிடப்பட்ட அறிக்கைகள் குறித்த விவரம் யாவை?

1973 பிப்ரவரி 28]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) 1971-72, 1972-73 ஆண்டுகளில் பிற்பட்ட வகுப்பினர் நலத்துறை மூலம் உதவித் தொகை வழங்குவது சம்பந்தமாக அறிவிப்புகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் முக்கியமாக தமிழ் ஆங்கிலம் தினசரிகளிலும் தமிழரசு தமிழ் ஆங்கில இருவார இதழிலும் அறிவிக்கப்பட்டன.

1971-72-ம் ஆண்டில் அரிசன நலத்துறை இயக்குநரால் பத்திரிகைகளில் விளம்பரம் எதுவும் செய்யப்படவில்லை. நடப்பு ஆண்டில் முக்கியமான பத்திரிகைகளான இந்து, மெயில், தினத்தந்தி, தினமணி, தென்னகம், முரசொலி மூலமாக அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அகில இந்திய ரேடியோ மூலமும் அறிவிக்கப்பட்டது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, கடந்த சில ஆண்டுகளாக அந்த விளம்பரம் கெஜட்டில் வெளியிடப்படாததற்குக் காரணம் என்ன? தாங்கள் உதவிப் பணம் பெறத் தகுதி பெற்றவர்களா என்பதை அவர்கள் அறிய அரசு என்ன வழிவகை செய்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இது வழக்கமாக பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப்பட்டு வருகிறது. 1971–72-ல் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. 1972–73-ல் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட உதவித் தொகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழரசு பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு வருகிறது.

மின்சார வாரியம் உபயோகப்படுத்தும் கம்பங்கள்

* 190 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மின்வாரியத்தில் தற்போது பயன்படுத்தப்படும் "காங்கிரீட் கம்பங்களுக்குப் பதிலாக இரும்புத் தண்டவாளங்களை பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இல்லை.